[1970 ஆகஸ்ட் 28

Functional Estates for Electronic Computors

*99 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open Functional Estates for Electronic Computors in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மின் அணு 'electronic computor' சம்பந்தமாக இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன? வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற நேரத்தில் குறைந்த அளவில் இது உபயோகிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : Electronic computors ஆரம்பிப்பதற்கு போதுமான சக்தி இல்லை என்று சொன்னார்கள். பொதுவாக functional estate for elecronic computors, functional industrial estate for electronic industry என்ற அடிப்படையில் சுமார் ரூ. 39,60,000 செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றுவதற்கு இப்போது இடம் தேர்ந்து எடுக்கிற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் resistors, capacitors, condensors, connectors entertainment electronic industrial computors, auxiliary and ancillary for electronic industries முயற்சி இப்போது நாம் எடுத்து இருக்கிறோம். எலக்டிரானிக்ஸ் பொறுத்த வரையில் நம்முடைய மாகாணத்தில் போதிய அளவுக்கு முன்னேற்றம் காணவில்லை என்பது உண்மையாகும். ஜப்பான், ஜெர்மனி போன்ற தொழில் துறையில் முன்னேறி இருக்கும் நாடுகளோடு நாம் தொடர்பு கொண்டு இதைச் சிறந்த முறையில் இந்த electronic complex இங்கே உருவாக்கலாம் என்று முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுத்துக் கொண்டு இருக்கிறது. கம்ப்யூட்டர் வேண்டுமா, வேண்டாமா என்பதை தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலைக்கும் பொறுத்த விஷயமாகும். தொழிலாளர் அமைச்சரைக் கேட்டால் பதில் சொல்வார்.

தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை

*100 வினு.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள கூட்டுறவுத் தொழிற்பேட்டை எப்போது தொடங்கப்பட்டது?

(இ) 1968 நவம்பர் முடிய எத்தனை யூனிட்டுகள் செயல் படுகின்றன?

(உ) வேறு புதிய யூனிட்டுகள் செயல்படாமைக்கு காரணம் என்ன?